## *புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி*

*2018 மாசி மாதம் 05ம் திகதி முதல் 11ம் திகதி வரை*

## “விசுவாசம் (நம்பிக்கை) இருக்குமானால் இறைவனுடைய மகிமையை காண முடியும்”

01. ஆரம்பப் புகழ்ச்சிக்காக :
    ஆண்டவரிலேயே மகிழ்ச்சிகொள்: உன் உள்ளத்து விருப்பங்களை அவர் நிறைவேற்றுவார். உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு: அவரையே நம்பியிரு அவரே உன் சார்பில் செயலாற்றுவார்” (திருப்பாடல் 37:4-5)
    நாம் செபிக்கும் போது உற்சாகத்துடனும், புத்தெழுச்சியுடனும் செபிக்க வேண்டும். மகிழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடு நாம் அவரைப் புகழவேண்டும். செபத்தினுள் நாம் எதிர்பார்ப்பவை ,உண்மையாக வேண்டுமானால் இறை ஆண்டவருடைய அன்பை குறித்து உறுதியுடன் நாம் இவ்வாறு அறிக்கையிடுவோம்.
    புபுது பாடல் இல. 07 “தூய ஆவியே எம் மனதை…”

02. கடந்த வாரத்தின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டு அவ் அனுபவங்களுக்காகவும் இறைவனைப் புகழ்வோம்.

03. வாரத்திற்கான நற்செய்தி :
    i. வார்த்தையின் ஊழியரும் இன்னும் சிலரும் விசுவாசம் எனும் பரிசை முன்கொண்டு இறைவனுடைய மகிமையை அனுபவித்த அனுபவங்களை பகிர்ந்துக் கொள்ளுங்கள்.
    ii. இறை ஆண்டவரைக் குறித்து எமது விசுவாசத்தை வளர்த்துக் கொள்வதற்கு, பெலப்படுத்திக் கொள்வதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை கீழ்காணும் வேதாகம பகுதியை வாசித்து பகிர்ந்து கொள்ளுங்கள்.
    **“ஏனெனில் இயேசு ஆண்டவர் என வாயார அறிக்கையிட்டு, இறந்த அவரைக் கடவுள் உயிர்தெழச் செய்தார் என நீங்கள் உள்ளூர நம்பினால் மீட்பு பெறுவீர்கள்…”**
    (உரோமையர் 10:9-10)

04. வார்த்தையின் ஊழியருக்காக :
    - உங்களுள்/என்னுள் விசுவாசத்தை பெலப்படுத்திக் கொள்வதற்கும், விசுவாசத்தின் வல்லமையை வெளிப்படுத்துவதற்கும் மிகவும் வல்லமை வாய்ந்த முறை தான் இயேசு கிறிஸ்துநாதரை எமது வாழ்வின் ஒரே ஆண்டவர் என்று வெளிப்படையாக கூறுவதும் அவர் என்றென்றும் ஒரேவிதமாக உயிருள்ளவராக எம்முள் வீற்றிருக்கிறார் என்று விசுவாசிப்பதும் அதற்கு சாட்சி பகிர்வதும் ஆகும்.
    - புனிதயோவான் 11:4 **“இந்நோய் சாவில் போய் முடியாது கடவுளின் மாட்சி விளங்கவே இவன் நோயுற்றான். இதனால் மானிடமகனும் மாட்சி பெறுவார் என்றார்…”**
    - புனிதயோவான் 11:41-**“இயேசு அண்ணாந்து பார்த்து தந்தையே! நீர் என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்ததற்காக உமக்கு நன்றி கூறுகின்றேன். நீர் எப்போதும் என் வேண்டுதலுக்குச் செவிசாய்க்கிறீர் என்பது எனக்குத் தெரியும். எனினும் நீரேஎன்னை அனுப்பினீர் என்று சூழ்ந்து நிற்கும் இக்கூட்டம் நம்பும் பொருட்டே இப்படிச் சொன்னேன். என்று கூறினார்…”**

- இயேசு கிறிஸ்துவினுள் இருந்த விசுவாசம் எத்தனை பெரியது. சந்தேகமில்லாத, உறுதியானது. அக் கணத்தில் புதுமை நிகழ்ந்து இருக்காவிட்டாலும் இயேசு கிறிஸ்துநாதர் பெரியதொரு விசுவாசத்துடன் தமது தந்தைக்கு செபித்த விதத்தை காண்போம்.
- எமது உள்ளத்தில் நமஸ்காரத்தை செலுத்தியவாறு எமது கண் மன இதயத்தை அவர்பால் ஒருகணம் செலுத்துவோம்.

05. இறுதிசெபம்.–.

- புனித மாற்கு 11:24 ‘‘ஆகவே உங்களுக்குச் சொல்கிறேன் நீங்கள் இறைவனிடம் வேண்டும் போது எவற்றையெல்லாம் கேட்பீர்களோ அவற்றைப் பெற்றுவிட்டீர்கள் என நம்புங்கள்.’’

  புபுது பாடல் இல. 54 ‘‘சீவியத்தின் தேவனே…’’

*******************************************************************************

## *புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி*

*2018 மாசி மாதம் 12ம் திகதி முதல் 18ம் திகதி வரை*

**‘‘இறைவனது வல்லமையை அனுபவிக்கும் வழி விசுவாசமாகும்.’’**

01.ஆரம்பப் புகழ்ச்சிக்காக

- புகழ்ச்சி இறைவன் மீது இருக்கின்ற அசைவுறாத விசுவாசத்துடன் வாழும் ஒருவரின் வாயினால் வெளிப்படும் இனிமையான பாடலாகும். விசவாசத்தின் வல்லமையை வெளிப்படுத்தும் பலம் வாய்ந்த முறை வாயினால் வெளிப்படுத்துவதாகும். இறைவனுக்கு அவ் இனிமையான பாடலைப் பாடுவதற்கு அவரை அனுபவிப்பவர்களுக்கு மாத்திரமே முடியும். அவருடன் அழமான தொடர்ப்பை ஏட்படுத்தி விசவாச வாழ்க்கை வாழ்பவர்களாக, இறைவனது வல்லமையை அனுபவித்த விசுவாச அனுபவங்களுடன் புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்.
- கோலோசையர் 2:6-7 **‘‘கிறிஸ்து இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொண்டீர்கள். அவரோடு இணைந்து வாழுங்கள். அவரில் வேரூன்றியவர்களாகவும் அவர் மீது கட்டியெழுப்பப்பட்டவர்களாகவும் இருங்கள். நீங்கள் கற்றுக்கொண்ட விசுவாசத்தில் உறுதியாக நில்லுங்கள். நன்றிமிக்கவர்களாய்த் திகழுங்கள்.’’**

- புபுது பாடல் இல 19 ‘‘எந்தன் உயிர்நீரே…’’

02. கடந்தவாரத்தின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டு சிறு புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்.

03. வாரத்துக்குரிய நற்செய்தி

- விசுவாசம் இறைவனது வல்லமையை அனுபவிக்க முடியுமான வழியாகும்.

- விசவாசிப்பவனூடாக இறைவனது வல்லமையான செயல்கள் வெளிப்படும். விசுவாசம் திறமையினால், சுய முயற்சியினால் ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல. விசுவாசம் வல்லமையாகும் - பரிசாகும். கொடையாகும்.

i. அப்படியானால் இறைவனது வல்லமையை அனுபவிப்பதற்கு தேவையான விசுவாசத்தின் பரிசைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை கலந்துரையாடுங்கள்.

ii. விசவாசத்தின் வல்லமையை ஆழமாக அனுபவித்த சந்தர்ப்பங்களை ஒருவர் ஒருவருடன் பகிர்ந்துக் கொள்ளுங்கள்.

iii. அவ்வாறே விசுவாச வல்லமையை அனுபவித்தவாறு கிறிஸ்துநாதருக்கு சாட்சி பகிர்வதற்கு நீங்கள் எடுத்துள்ள படி முறைகளைப் பற்றி கலந்துரையாடுங்கள்.

04. வார்த்தையின் ஊழியருக்காக

- எமக்கு ஆன்மீக வல்லமையை பெற்றுக் கொள்வதற்கு இருக்கின்ற ஒரே வழி விசுவாசமாகும். உலகின் ஆரம்பம் தொடக்கம் நாம் வாழ்கின்ற அகிலத்தினுள் ஈர்ப்பு அலைகள், மின் அலைகள் போன்ற பௌதீக வல்லமைகள் இருந்தாலும் அவ் வல்லமையை பெற்றுக் கொள்வதற்கு மனிதன் அறிந்துதிருக்கவில்லை. காலத்துடன் இவ் வல்லமைகளை தொடர்புகொண்டு மின்சார வல்லமை, வெப்பத்தின் வல்லமை, அணுக்களின் வல்லமை போன்ற பௌதீக வல்லமைகளை கண்டுபிடிப்பதற்கு மனிதனுக்கு முடியுமாகியது. ஆனாலும் இப் பௌதீக வல்லமையை விட அதிக வல்லமை வாய்ந்த ஆன்மீக வல்லமை ஒன்று இருக்கின்றது. இறைவனுடைய வல்லமை இக் கணத்திலும் எம்மோடு இருக்கின்றது. இவ் வல்லமையை பெற்றுக்கொள்ளும் வழி விசுவாசமாகும்.
- **“உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன் எவராவது இந்த மலையை பார்த்து பெயர்ந்து கடலில் விழு எனத் தம் உள்ளத்தில் ஐயம் எதுவுமின்றி நம்பிக்கையுடன் கூறினால், அவர் சொன்னவாறே நடக்கும். ஆகவே உங்களுக்கு சொல்கிறேன் நீங்கள் இறைவனிடம் வேண்டும் போது எவற்றையெல்லாம் கேட்பீர்களோ, அவற்றைப் பெற்று விட்டீர்கள் என நம்புங்கள் நீங்கள் கேட்டபடியே நடக்கும்.”** (புனித மாற்கு 11:23-24)

05. வாரம் முழுவதும் செயல்படுத்துவதற்கு

- உங்களுடைய விசுவாசம் எத்தகைய வல்லமை வாய்ந்தது என்பதை சிந்தித்து பாருங்கள்.
- வாயினால் அறிக்கையிடுவது விசுவாச வல்லமையை வெளிப்படுத்தும் சிறந்த வழியாகும்.
- விசுவாசத்திற்கு சாட்சி பகிர்வதற்கு உங்களுள் இருக்கின்ற விழிப்புறுதல் எத்தகையது?
- விசுவாச வல்லமையை அனுபவிப்பதற்கு தாகம் கொள்வோம்.

05. இறுதி புகழ்ச்சி

- புபுது பாடல் இல. 95 “நீர் தேர்ந்துக் கொண்ட....”